# லெச்சே நகரம்

## ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் அல்லாதவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக நடாத்தப்படும் துணை ஆலோசகர் தேர்தல்

### மேலாளர்

ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் அல்லாதவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக நடாத்தப்படும் துணை ஆலோசகர் தேர்தலுக்கான விதி ஒழுங்கு முறை (மாநகரசபை தீர்மான எண் 122/2002இன் படி)

### அழைப்பு

லெச்சே வாழ் நகரத்தில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் சாராத குடிமக்களின் ஒவ்வொரு குழுவும் **நகர துணை ஆலோசகர் பதவிக்கு** உரிய பிரதிநிதிகளை வேட்பாளர்களாக குறிப்பிட வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் சாராத குடிமக்களின் ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு **100** குடியிருப்பாளர்களுக்கும் அல்லது **100 பேரின் பகுதிக்கு 1** என்ற விகிதத்தில் மட்டுமே வேட்பாளர்களை முன்வைக்க முடியும் அதற்கு மேல் முன்வைக்க முடியாது.

### வேட்பாளராக விண்ணப்பிப்பதற்கு தேவையான தகமைகள்:

1. ஐரோப்பிய ஒன்றியம் சாராத வேறு ஒரு நாட்டின் குடியுரிமை உள்ள ஒரு பிரஜை அல்லது அகதி அந்தஸ்து நிலையில் உள்ள ஒரு பிரஜை ( அதாவது ஒரு நாடற்ற நபர்) அல்லது இத்தாலியக் குடியுரிமை இல்லாதவராக இருக்க வேண்டும் ;
2. 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும் ( அல்லது விண்ணப்ப முடிவு திகதிக்குள் (11.12.2024) 18 வயதை எட்டியிருக்க வேண்டும் ;
3. லெச்சே நகரசபை (comune di Lecce) இன் குடிமக்களின் பதிவேட்டில் ஆகக்குறைந்தது **1** வருடத்திற்கு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் ;
4. அத்துடன் இத்தாலியிலோ அல்லது வெளிநாட்டிலோ எந்தவொரு குற்றவியல் தண்டனையும் செய்திருக்கக் கூடாது.

## வேட்பாளராக விண்ணப்பிப்பதற்குரிய முடிவு திகதி :

நகர துணை ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர் குறைந்தபட்சம் **40** இத்தாலியக் குடியுரிமை இல்லாத வெளிநாட்டவரின் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்துடன் மேலே **1, 2, 3** இல் குறிப்பிடப்பட்ட தகமைகளைப் பூர்த்தி செய்த வேட்பாளர் **லெச்சே நகராட்சிப் பொதுச்செயலாளரிடம்** (Palazzo Carafa Piazza Sant'Oronzo – primo piano) இம் முகவரியில்

**11/12/2024 மதியம் 12.00 மணிக்குள்**

வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்.

## வேட்பாளருக்குரிய விண்ணப்பத்திற்கான ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள்:

வேட்பாளருக்குரிய விண்ணப்பத்திற்கான ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் முறைகளில் கிடைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- லெச்சே நகராட்சியின் தேர்தல் அலுவலகத்தில் (Viale Aldo Moro, 34-1$^0$ piano)
- l'URP di Palazzo Carafa வில் (Piazza Sant'Oronzo – piano terra)
- இணையத் தளத்தின் முகப்புப் பக்கத்தில் : www.comune.lecce.it QRcode (இணையத் தளம்)

## வேட்பாளருக்குரிய தகவல்கள்:

வேட்பாளருக்குரிய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் அவரவர்களிற்குரிய மொழிகளில் பின்வரும் முறைகளில் கிடைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- இணையத் தளத்தின் முகப்புப் பக்கத்தில் : www.comune.lecce.it QRcode (இணையத் தளம்)
- லெச்சே நகராட்சியின் தேர்தல் அலுவலகத்தில் (Viale Aldo Moro, 34-1$^0$ piano)
- தொடர்பு :0832/682530 ( திங்கள்- வெள்ளி: 08.00-13.00 )/மின்னஞ்சல்: giovanni.piconte@comune.lecce.it

லெச்சே, 11/11/2024

மேலாளர்

மக்கள் சேவைப்பிரிவு